முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண்.47/2023

இன்று 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பூங்கொடி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : நாராயணமூர்த்தி | கிராமம் | : கணக்கம்பாளையம் |
| வயது | : 52 | தாலூக்கா | : திருப்பூர் வடக்கு |
| நாள் | : 02-09-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 2 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) தாவா ஏ அயிட்டச் சொத்து 30.03.2003 பாகப்பிரிவினை பத்திரத்தின்படியும், அதற்கு முன்னர் 12.08.1932 ம் தேதியிட்ட பத்திரத்தின்படியும் வந்த சொத்து என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட சொத்து கணக்கம்பாளையம், திருப்பூர் க.ச.எண்.45 ல் உள்ளது என்றால் சரிதான். தாவா பி அயிட்டச் சொத்தான தடம் க.ச.எண்.46 ல் உள்ளது என்றால் சரிதான். 12.08.1932 ம் தேதியிட்ட பத்திரத்தில் க.ச.எண்.45 ல் கண்ட சொத்துக்களுக்கு பாத்தியப்பட்ட நபர்களுக்கு க.ச.எண்.46 ல் கண்ட தடத்தில் பாத்தியம் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) கடந்த 30.03.2003 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்திலும் க.ச.எண்.46 ல் தடபாத்தியம் உள்ளதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரை பி அயிட்டச் சொத்து க.ச.எண்.46 தடம் என்றால் சரிதான். அந்த தடத்தின் உரிமையாளர் க.ச.எண்.46 ல் யாராருக்கு உரிமை உள்ளதோ அவர்கள் பெயர்கள் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். க.ச..எண்.46 ல் எனக்கு தட உரிமையிருப்பதாக வருவாய்த்துறையில் நான் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்றம் சென்று தட உரிமை பெற்றுக் கொள்ளச் சொல்லி விட்டார்கள்.

3) க.ச.எண்.46 தடத்தில் நான் செல்ல முற்பட்டு எனக்கும் பிரதிவாதிக்கும் சண்டை ஏற்பட்டு பெருமாநல்லூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். அதனால் எங்கள் இருவர் மீதும் வழக்கு பதியப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எனக்கு க.ச.எண்.46 ல் தடப்பாத்தியம் இருந்தால் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று வருமாறு கூறினார்கள் என்றால் சரிதான்.

4) எனக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.45 சொத்துக்கு பஞ்சாயத்து மெயின்ரோட்டு மூலம் வரலாம் என்றால் ஒரு பாகத்துக்கு வரலாம், இன்னொரு பாகத்துக்கு வர முடியாது. இரண்டு பாகத்துக்கும் இடையில் எனக்கும் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொது பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த பொது தடத்தின் மூலமாக க.ச.எண்.45 ல் உள்ள இன்னொரு பாகத்துக்கு நான் செல்லலாம் என்றால் போக முடியாது. நில அளவையர் அழைத்து சென்று பார்க்கலாமா என்றால் பார்க்கலாம்.

5) அந்த பொது தடத்தின் மூலமாக க.ச.எண்.45 ல் உள்ள இன்னொரு பாகத்துக்கு செல்ல முடியும், நான் தொன்று தொட்டு அந்த பாதையில் சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு இடைஞ்சல் செய்வதற்காக க.ச.எண்.46 ல் வழித்தடம் உள்ளதாக பொய்யாக வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 1932 ம் ஆண்டில் இருந்து என் மூதாதையர் க.ச.எண்.46 தடத்தை பயன்படுத்தி வருவதாக பொய்யாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 2009 ம் ஆண்டில் இருந்து தாவா தாக்கல் செய்யும் வரை அந்த தடத்தை பயன்படுத்தி வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு உரிமையில்லாத ஒன்றை உரிமைப்படுத்தி தாவா தாக்கல் செய்துள்ளேன். அதனால் நான் தாக்கல் செய்த தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.09.02 17:26:56 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.